©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 227A] சென்னை, வியாழக்கிழமை, ஜூலை 13, 2017
ஆனி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2017.**

**1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்திய குடியரசின் அறுபத்தி எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச்சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது, 2017 ஆம் ஆண்டு, மே 31 ஆம் நாள் நடைமுறைக்கு வந்திருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

33 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்விளை பொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் உள்ள வரம்புரையில் “ஆறு ஆண்டுகள்” என்ற சொற்றொடருக்கு பதிலாக, “ஏழு ஆண்டுகள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2017.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**3.** (1) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், மேற்சொன்ன அவசர சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன அவசரச்சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்விளைபொருள் சந்தைபடுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 33—ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தைக்குழு அமைக்கப்படும் வரையில் மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலஅளவிற்கு சந்தைக்குழுவின் அலுவல்களை மேலாண்மை செய்யும் பொருட்டு, தனிஅலுவலர் ஒருவரை அமர்த்துவதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது. மேற்சொன்ன வகைமுறையின் வழி, மேற்சொன்ன சந்தைக் குழுக்களின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு 23 சந்தைக் குழுக்களுக்கு தனி அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர் மற்றும் அவர்களின் பதவிக்காலம் தமிழ்நாடு சட்டம் 8/2017 இன்படி ஆறு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்டது. தனி அலுவலர்களின் பதவிக்காலம் 30—05—2017 அன்று முடிவடைவதாக இருந்தது. மேலும் சந்தைக்குழுக்களை நியமிப்பதற்கு மேலும் சிலகாலம் எடுத்துக் கொள்ளும் என்பதால், மேற்சொன்ன தனி அலுவலர்களின் பதவியுரிமைக்காலத்தை 30—05—2017 ஆம் தேதிக்கு அப்பாற்பட்டு மேலும் ஓர் ஆண்டு கால அளவிற்கு அல்லது சந்தைக் குழுக்களை அமைக்கும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில், நீட்டிப்பதற்கு ஒரு கட்டாயத்தேவை இருந்தது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 27/1989 என்ற சட்டத்தை திருத்தம் செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** அதன்படியே, ஆளுநர், தனிஅலுவலர்களின் பதவிக்காலத்தை 30—05—2017—க்கு அப்பாற்பட்டு மேலும் ஓர் ஆண்டு காலஅளவிற்கு அல்லது சந்தைக் குழுக்களை அமைக்கும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில், நீட்டிப்பதற்கு 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச்சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2017) சாற்றம் செய்துள்ளார்.

**3.** இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன அவசரச் சட்டத்தை மாற்றீடு செய்ய விழைகிறது.

**இரா. துரைக்கண்ணு,**
*வேளாண்மைத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.